தினகரன்

12.05.2024

### சமூக ஆர்வலர் பெர்டின் ராயன் மீது கொடூர தாக்குதல்

# குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய வேண்டும்

## நெல்லையில் ஹென்றி டிபேன் பேட்டி



**நெல்லை, மே 12:** பாளையில் சமூக ஆர்வலர் பெர்டின் ராயனை கொலை செய்ய முயன்ற வழக்கில் குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வக்கீல் ஹென்றி டிபேன் தெரிவித்தார்.

நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் மூர்த்தி, கலெக்டர் கார்த்திகேயன் ஆகியோரை சந்தித்து, நெல்லை சமூக ஆர்வலர் பெர்டின்ராயனை கொலை செய்ய முயன்ற வழக்கில் குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய வேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் வக்கீல் ஹென்றி டிபேன் மனு அளித்தார். பின்னர் அவர் கூறியதாவது: நெல்லை மாநகர் பகுதியில் விதிமீறல் கட்டிடங்கள், ஆக்கிரமிப்பு நிலங்கள் உள்ளிட்டவை குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் தகவல்களை திரட்டி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்து வந்தார் சமூக நல ஆர்வலர் பெர்டின்ராயன். இதை பிடிக்காத சிலர் அவர் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தியுள்ளனர். பெர்டின் ராயன் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரது காரில் இருந்து கைப்பற்றப்பட்ட ஏர்கன் குறித்து பாளை ஐகிரவுண்ட் போலீசார் சம்மன் அனுப்பியுள்ளனர். ஏர்கன் பிஸ்டலுக்கு லைசென்ஸ் தேவையில்லை. கடந்த 2023ம் ஆண்டு நவம்பரில் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், பாதுகாப்பு வழங்கக்கோரி பெர்டின்ராயன் மனு தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், அவருக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை போலீசார் கடைப்பிடிக்கவில்லை. இந்நிலையில் அவர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து மாநகர போலீசார் முறையாக விசாரணை நடத்தி குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். பேட்டியின் போது மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் ஸ்ரீராம், இந்திய கம்யூனிஸ்ட் ரெங்கன், சமூக ஆர்வலர்கள் வான்மூகில் பிரிட்டோ, யாதுமாகிலேனாகுமார், இனபடுகொலைக்கு எதிரான தமிழர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பீட்டர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.